# கும்பகோணம் மாநகராட்சி

## அவசரக்கூட்ட அழைப்பிதழ்

# கும்பகோணம் மாமன்றம்

அன்புடையீர்,

கும்பகோணம் மாநகராட்சியின் மாமன்ற அவசரக்கூட்டம் வருகின்ற 29.07.2026 **புதன்கிழமை காலை** 10.45 மணியளவில் கும்பகோணம் மாநகராட்சி புதிய அலுவலகத்தில் உள்ள **திரு.கோசி.மணி மாமன்ற வளாகத்தில்** உள்ள **திரு.இரா.துரை மாமன்ற கூட்ட அரங்கத்தில்** நடைபெற உள்ளது. அதுசமயம் நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ள பொருள்கள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இடம் : கும்பகோணம்**
**நாள் : 28.07.2026**

**மேயர்**
**கும்பகோணம் மாநகராட்சி**

**இணைப்பு** : பொருள்களில் நிரல்
**பெறுநர்** : **அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்**
**நகல்** :
1. பாராளுமன்ற உறுப்பினர், மயிலாடுதுறை
2. மாநிலங்களவை உறுப்பினர்
3. சட்டமன்ற உறுப்பினர், கும்பகோணம்
4. அனைத்து நாளிதழ்கள்

| <u>மாநகர் மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் 29.07.2026ம்</u> | **ஜூலை மாதம் அவசரக்கூட்ட தீர்மானம்**<br>**வரிசை எண் மற்றும் மாமன்ற கூட்டப்பொருள்** | **மாமன்ற தீர்மான எண்** |
|---|---|---|
| | **<u>நன்றி தீர்மானம்:</u>**<br>கும்பகோணம் மாநகராட்சி மேயர் அவர்கள் கீழ்கண்டவாறு நன்றி தீர்மானத்தினை கொண்டு வந்தார்.<br>தமிழ்நாடு அரசு பள்ளிக் குழந்தைகளுக்காகச் செயல்படுத்தி வரும் காலை உணவுத் திட்டத்திற்குப் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பெயரைச் சூட்டியதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து இயற்றப்படும் தீர்மானம்.<br>**<u>தீர்மானத்தின் விவரம்:</u>**<br>ஏழை, எளிய குடும்பங்களைச் சேர்ந்த அரசுப் பள்ளி மாணவர்கள் பசியின்றிப் கல்வி பயில வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன், தமிழ்நாடு அரசால் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வரும் "காலை உணவுத் திட்டத்திற்கு", ஏழைப் பங்காளரும், பள்ளிக்கூடங்கள் பல திறந்து கல்விப் புரட்சி செய்தவருமான அண்ணல் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பெயரைச் சூட்டி கௌரவித்துள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இக்கூட்டம் தனது மனமார்ந்த நன்றியினையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறது.<br>மதிய உணவுத் திட்டத்தைத் தந்து ஏழை எளிய குழந்தைகளின் கல்விக்கு வித்திட்ட பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பெயரையே இக்காலை உணவுத் திட்டத்திற்குச் சூட்டியிருப்பது, அவரது வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டிற்குச் செய்யும் தகுந்த மரியாதையாகவும், சமூக நீதிப் பாதையில் தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சியை மேலும் ஊக்குவிப்பதாகவும் அமைந்துள்ளது.<br>அரசுப் பள்ளி மாணவர்களின் நலன் கருதி, தொலைநோக்குப் பார்வையுடன் இத்தகைய உன்னதமான திட்டத்தைச் செயல்படுத்தி வரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் சார்பாகவும், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சார்பாகவும் கும்பகோணம் மாநகராட்சி மேயர் என்ற முறையில் எனது நெஞ்சார்ந்த நன்றியினையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.<br>மேற்கண்ட தீர்மானத்தினை மேயர் அவர்கள் முன்மொழிய துணைமேயர் மற்றும் மதச்சார்பற்ற அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் வழிமொழிய தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. | 543<br>நன்றி தீர்மானத்தினை வணக்கத்துக்குரிய மேயர் அவர்கள் முன்மொழிய துணைமேயர் மற்றும் மதச்சார்பற்ற அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் வழிமொழிய தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. |
| | **<u>நன்றி தீர்மானம்:</u>**<br>கும்பகோணம் மாநகராட்சி துணைமேயர் திரு.சு.ப.தமிழழகன் அவர்கள் கீழ்கண்டவாறு நன்றி தீர்மானத்தினை கொண்டு வந்தார்.<br>கடந்த திராவிட மாடல் ஆட்சியில் மாவட்டம் தோறும் சுமார் 3 கோடி மதிப்பில் JCB கிட்டாச்சி மற்றும் இயந்திர உபகரணங்கள் வழங்கப்பட்டு நீர் நிலைகளை தூர்வாரி புணரமைக்கும் பணிகளை செய்திட வழிவகை செய்யப்பட்டது.<br>அதன்படி நமது கும்பகோணம் மாநகராட்சி பகுதிகளில் உள்ள வாய்க்கால்களில் தூர்வாரும் பணி பொதுப்பணிதுறை மூலம் தற்போது நடைபெற்று வருவது கடந்த ஆட்சியின் சாதனை என்பதை சொல்லிக்கொள்வதில் பெருமையடைகிறோம்.<br>இதற்கு இந்த திட்டத்தை செயல்படுத்திய முந்திய முதல்வர் மாண்புமிகு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு மனமாந்த நன்றியை இம்மாமன்றம் மூலம் தெரிவித்துக்கொள்கிறோம்.<br>மேற்கண்ட தீர்மானத்தினை துணைமேயர் திரு.சு.ப.தமிழழகன் அவர்கள் முன்மொழிய மேயர் மற்றும் மதச்சார்பற்ற அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் வழிமொழிய தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. | 544<br>நன்றி தீர்மானத்தினை வணக்கத்துக்குரிய துணைமேயர் திரு.சு.ப.தமிழழகன் அவர்கள் முன்மொழிய மேயர் மற்றும் மதச்சார்பற்ற அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் வழிமொழிய தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | **பொருள் எண்.1**<br>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் காணொளிகாட்சி ஆய்வுக் கூட்ட அறிவுரைகளின்படி, கும்பகோணம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள 44 எண்ணிக்கையிலான அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 1ம் வகுப்பு முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் 3931 மாணாக்கர்கள் பயனடைந்து வந்த நிலையில் தற்போது நகர்புற உள்ளாட்சி அமைப்பில் உள்ள 1ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் அனைத்து மாணாக்கர்களும் பயனடையும் வகையில் விரிவாக்கம் செய்யப்படுவதால் கும்பகோணம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 53 எண்ணிக்கையிலான மாநகராட்சி, அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மொத்தம் 8926 மாணாக்கர்கள் பயன்பெறும் வகையில் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தினை விரிவுபடுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>எனவே, முதலமைச்சரின் காலை உணவு வழங்கும் திட்டத்தினை செயற்படுத்துவதற்கு ஏதுவாக கும்பகோணம் மாநகராட்சி, மண்டலம்-3, வார்டு எண் 30 கோபு சிவகுருநாதன் பள்ளி வளாகத்தில் உள்ள CMBFS சமையலறையை விரிவாக்கம் செய்தல் மற்றும் வளாகத்தில் பேவர் பிளாக் (paver block) தளம் அமைத்தல். பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.15.50 இலட்சத்திற்கு (ரூபாய் பதினைந்து இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:**<br>1. அனுமதி அளிக்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை வருவாய் நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க. எண் 7190 / 2026/ E2** | 545<br>வருகை புரிந்த பெரும்பான்மை மாமன்ற உறுப்பினர்களின் அனுமதியோடு இப்பொருளுக்கு அனுமதி அளிக்கப்பட்டது. |
| | **பொருள் எண்.2**<br>கும்பகோணம் மாநகராட்சி மண்டலம் 1-க்குட்பட்ட வார்டு 1 முதல் 6 வரை மற்றும் 11 முதல் 16 வரை ஆகிய பகுதிகளில் உள்ள பாதாளச்சாக்கடை கழிவு நீர்க் குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் கசிவுகளை உடனுக்குடன் சரி செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.10,00,000/- (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட மதிப்பீட்டை குடிநீர் மற்றும் வடிகால் நிதி 2026-27 செலவினம் செய்ய அனுமதிக்கலாம்.<br>**ந .க .எண் : 7108 /2026/இ2** | 546<br>வருகை புரிந்த பெரும்பான்மை மாமன்ற உறுப்பினர்களின் அனுமதியோடு இப்பொருளுக்கு அனுமதி வழங்கப்பட்டது. |
| | **பொருள் எண்.3**<br>அரசாணை (4D) எண் 14. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை. நாள் 21.04.2025-ல் தேசிய வீட்டு வசதி வங்கி (National Housing Bank) நிதி மற்றும் மாநில நிதிக்குழு 2025-2026 (SFC) நிதியின் கீழ் கும்பகோணம் மாநகராட்சியுடன் புதிதாக சேர்க்கப்பட்ட தாராசுரம் பகுதிகளுக்கு குடிநீர் விநியோகத்தினை மேம்படுத்தும் பணி (இரண்டாம் கட்டம்) (Improvement of Water Supply Scheme Phase-II, Dharasuram Area) நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த குடிநீர் திட்டத்தினை நிறைவு செய்ய பொதுப் பணித் துறை (PWD), நீர்வளத் துறை (WRD), மாநில நெடுஞ்சாலைத் துறை (State Highways), தேசிய நெடுஞ்சாலைத் துறை, (National Highways) ஆகிய துறைகளில் தடையின்மைச் சான்று மற்றும் Feasibility Study போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதால் மேற்கண்ட பணிகளுக்காகும் தோராய செலவினம் ரூ.2,00,000/-க்கு (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது..<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>**1.** மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>**2.** மேற்படி செலவினத்தை மாநகராடசியின் குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவிடவும் மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>**ந .க .எண் : 7759 /2026/இ2** | 547<br>வருகை புரிந்த பெரும்பான்மை மாமன்ற உறுப்பினர்களின் அனுமதியோடு இப்பொருளுக்கு அனுமதி அளிக்கப்பட்டது |
| | **பொருள் எண்.4**<br>கும்பகோணம் மாநகராட்சி மண்டலம்-1 வார்டு எண்.04 மேலக்காவேரி காமராஜ் உயர்நிலைப் பள்ளியில் புதிய கழிப்பறை அமைத்தல், ஏற்கனவே உள்ள கட்டிடத்திற்கு வர்ணம் பூசுதல் மற்றும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்துதல் பணியினை மேற்கொள்ள செலவினத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.15.75 (பதினைந்து இலட்சத்து எழுபத்து ஐந்தாயிரம் மட்டும்) மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது..<br>**<u>அலுவலக குறிப்பு:</u>** | 548<br>வருகை புரிந்த பெரும்பான்மை மாமன்ற உறுப்பினர்களின் அனுமதியோடு இப்பொருளுக்கு அனுமதி வழங்கப்பட்டது |

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

மாநகரத்தின் பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட செலவினத்தை 2026–2027 மாநகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கலாம்

**ந .க .எண் : 7107/2026/இ2/ம1**

---

**பொருள் எண்.5**

கும்பகோணம் மாநகராட்சி மண்டலம்–3–இல் உள்ள வார்டுகளில் உள்ள தெருக்களில் அமைந்துள்ள இயந்திரக்குழிகளின் மூடிகள் மாற்றும் பணி மற்றும் பழுதடைந்த இயந்திரக்குழிகளை எதிர்வரும் ஒரு வருடக்காலத்திற்கு சீர்செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.7.00 இலட்சம் (ரூபாய் ஏழு இலட்சம் மட்டும்) மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2) இச்செலவீனத்தினை மாநகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் கீழ் மேற்கொள்ளலாம

**ந.க.எண். 7191 /2026/E2**

549
வருகை புரிந்த பெரும்பான்மை மாமன்ற உறுப்பினர்களின் அனுமதியோடு இப்பொருளுக்கு அனுமதி வழங்கப்பட்டது

---

**பொருள் எண்.6**

கும்பகோணம் மாநகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவு டெங்கு கொசு கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ள (களப்பணி மேற்கொள்ள) பொது சுகாதாரத் துறை மூலமாக வழிகாட்டு நெறிமுறைகளின் படி 153 – பணியாளர்களை கொண்டு மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு மாமன்ற தீர்மான எண்.669 நாள்.31.07.2023 நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாமன்ற தீர்மான எண்.962 நாள்.22.01.2024 அனுமதி பெறப்பட்டு குறைந்த விலைவிகித ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள மெஸர்ஸ். ஆர்.கே.கம்பெனி, பெரம்பலூர் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதன் அடிப்படையில் மேற்படி நிறுவனத்தார்க்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு கள பணிகள் நடைபெற்று வருகிறது. தற்பொழுது கும்பகோணம் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டதால் 4 மண்டலத்திற்கு தனித்தனியாக நிர்வாக அனுமதி பெற நடவடிக்கையில் உள்ளது. எனவே ஒப்பந்தப்புள்ளி ஜூலை மாதம் முடிவடைய இருப்பதால் ஒப்பந்தப்புள்ளி கோரி பணியானை வழங்கும் காலத்தினை கருத்தில் கொண்டு இப்பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியம் உள்ளதால் இப்பணியினை மேற்கொண்டு வரும் மெஸர்ஸ், ஆர்.கே.கம்பெனி, பெரம்பலூர் நிறுவனத்தார் மூலம் அதே விலை விதிதத்தில் ஆகஸ்ட் 31 வரை கால நீட்டிப்பு செய்யவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.27,50,000–ற்கும் மாமன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது. .

**அலுவலக குறிப்பு**

(அ) அனுமதி அளிக்கலாம்.
(ஆ) செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**ந.க.எண். 5869/ 2023 / எச்.1**

550
வருகை புரிந்த பெரும்பான்மை மாமன்ற உறுப்பினர்களின் அனுமதியோடு இப்பொருளின் அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

---

**பொருள் எண்.7**

கும்பகோணம் மாநகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் கீழ் தாராசுரம் தலைமை நீரேற்று நிலையமான காவற்கூடம் 1.00 இலட்சம் கொள்ளளவு கொண்ட தொட்டியில் உள்ள பழுதடைந்த 30 எச்.பி., திறன்கொண்ட மின் மோட்டாரை 40 எச்.பி., திறன்கொண்ட மின் மோட்டார் மற்றும் அதற்குண்டான மின் இணைப்பு கேபிள்கள் மாற்றியமைக்கும் பணியினை ரூ.10.50 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்பு சட்டம் 2023 பிரிவு 57(7)ன் கீழ் மேற்கொள்ள மதிப்புமிக்க ஆணையர் அவர்கள் 15.06.2026 அன்று நிர்வாக அனுமதி அளித்துள்ளதன் அடிப்படையில் மேற்கண்ட பணிக்கு 18.06.2026 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட மூன்று விலைப்புள்ளிகள் மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எ ண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. | விலைப்புள்ளித் தொகை %. | குறைவு/அதிகம் |
|---|---|---|---|---|
| 1 | M/s. Madras switchgears Pvt., Ltd., Chennai | 879857.46 | 879348/00 | மதிப்பீட்டின் விலை விகிதத்தைவிட (–) 0.06% குறைவு |
| 2 | M/s. Baba Construction company, Thanjavur | 879857.46 | 882486.24 | மதிப்பீட்டின் விலை விகிதத்தைவிட (+)0.30 % அதிகம் |
| 3 | M/s. RBS Electric & Engg. Company | 879857.46 | 883700.00 | மதிப்பீட்டின் விலை விகிதத்தைவிட (+)0.44 % அதிகம் |

வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (–)0.06% குறைவாக

551
வருகை புரிந்த பெரும்பான்மை மாமன்ற உறுப்பினர்களின் அனுமதியோடு பதிவு செய்யப்பட்டது.

விலைப்புள்ளி அளித்துள்ள M/s. Madras switchgears Pvt., Ltd., Chennai நிறுவனத்தாரின் விலைப்புள்ளியினை ஏற்று குடிநீர்ப் பணி என்பதால், உடன் பணி முடிக்க வேண்டியுள்ளதாலும் மேற்படி நிறுவனத்தாருக்கு வேலை உத்தரவு வழங்கியதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மாமன்றம் பதிவு செய்யலாம்.

ந.க. எண் 5758/2026/இ2

**பொருள் எண்.8**

கும்பகோணம் மாநகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் கீழ் மண்டலம் 3, தாராசுரம் பகுதிக்கு குடிநீர் விநியோகம் செய்ய கலைஞர் காலனியில் உள்ள தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டியில் உள்ள பழுதடைந்த 10 எச்.பி., மின் மோட்டாரை அகற்றிவிட்டு 15 எச்.பி., மின்மோட்டார் மற்றும் தேவையான மின் உபகரணங்கள் பொருத்தும் பணியினை ரூ.4.10 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்பு சட்டம் 2023 பிரிவு 57(7)ன் கீழ் மேற்கொள்ள மதிப்புமிக்க ஆணையர் அவர்கள் 15.06.2026 அன்று நிர்வாக அனுமதி அளித்துள்ளதன் அடிப்படையில் மேற்கண்ட பணிக்கு 18.06.2026 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட மூன்று விலைப்புள்ளிகள் மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. | விலைப்புள்ளித் தொகை % | குறைவு/அதிகம் |
|---|---|---|---|---|
| 1 | M/s. Madras switchgears Pvt., Ltd., Chennai | 340707.00 | 340620.00 | மதிப்பீட்டின் விலை விகிதத்தைவிட (−) 0.03% குறைவு |
| 2 | M/s. Baba Construction company, Thanjavur | 340707.00 | 342120.00 | மதிப்பீட்டின் விலை விகிதத்தைவிட (+)0.041 % அதிகம் |
| 3 | M/s. RBS Electric & Engg. Company | 340707.00 | 347640.00 | மதிப்பீட்டின் விலை விகிதத்தைவிட (+)2.03 % அதிகம் |

வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (−)0.03% குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ள M/s. Madras switchgears Pvt., Ltd., Chennai நிறுவனத்தாரின் விலைப்புள்ளியினை ஏற்று குடிநீர்ப் பணி என்பதால், உடன் பணி முடிக்க வேண்டியுள்ளதாலும் மேற்படி நிறுவனத்தாருக்கு வேலை உத்தரவு வழங்கியதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மாமன்றம் பதிவு செய்யலாம்.

ந.க. எண் 5759/2026/இ2

552
வருகை புரிந்த பெரும்பான்மை மாமன்ற உறுப்பினர்களின் அனுமதியோடு பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண்.9**

கும்பகோணம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடை திட்டம் சோழன் நகர், சோலையப்பன் தெரு, வடக்குடியான் தெரு, பாணாத்துறை , செந்தில்நாதன் நகர், ஸ்ரீநிவாசன் நகர், மாதுளம்பேட்டை மற்றும் நேரு காலணி உந்து நிலையங்கள் ( Pumping Stations) , ஜான் செல்வராஜ் நகர் பாரத் நகர் மற்றும் எல், பி. எஸ் ரோடு தூண்டும் நிலையங்கள் ( Lifting Stations) பிரதான குழாய்கள்( Pumping Main) கழிவு நீர் சேகரிப்பு குழாய்கள்( Sewer Line) , இயந்திர குழிகள் பராமரிப்பு பணிக்கு 5 மாத காலத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூபாய் 99.75 லட்சத்திற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி பெற்று ( தீர்மான எண் 754 நாள்.29.08.2023) ஒப்பந்தப்புள்ளி கோரி M/s InFraEN (India) Private Limited நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கி பணி நடைபெற்று வருகிறது. இந்நிலையில் மேற்படி ஒப்பந்தகாரரின் ஒப்பந்த காலம் 31.07.2024 அன்றுடன் முடிவடைந்துள்ளதால் மேற்படி பணிக்கு நிர்வாக நலனை முன்நிறுத்தியும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அலுவலகத்தின் மூலம் செயல்பாட்டு திறனின் அடிப்படையில் (performance Index) கணக்கீடும் பணி நடைமுறையில் உள்ளதால் ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கையில் இருப்பதால் பாதாள சாக்கடை பராமரிப்பு பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு அதே ஒப்பந்ததாரருக்கு கீழ்க்கண்டவாறு

5 மாத காலத்திற்கு ( 01.08.2024 முதல் 31.12.2024 வரை) மதிப்பிட்டுத் தொகை ரூ.99.75 இலட்சத்திற்கு மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி நாள் . 22.0.7.2024 மாமன்ற தீர்மான எண் .228 நாள் 29.11.2024.

மூன்று மாத காலத்திற்கு (01.01.2025 முதல் 31.03.2025 வரை) மதிப்பிட்டுத் தொகை ரூ.60,00 இலட்சத்திற்கு மாமன்ற பொருள் தீர்மான எண். 296 நாள் 30.12.2024

மூன்று மாத காலத்திற்கு (01.04.2025 முதல் 30.06.2025 வரை) மதிப்பிட்டுத் தொகை ரூ.60,00 இலட்சத்திற்கு மாமன்ற பொருள் தீர்மான எண். 408 நாள் 28.3.2025

மூன்று மாத காலத்திற்கு (01.07.2025 முதல் 30.09.2025 வரை) மதிப்பிட்டுத் தொகை ரூ.60,00 இலட்சத்திற்கு மாமன்ற பொருள் தீர்மான எண். 65 நாள் 30.6.2025

மூன்று மாத காலத்திற்கு (01.10.2025 முதல் 31.12.2025 வரை) மதிப்பிட்டுத் தொகை ரூ.60,00 இலட்சத்திற்கு மாமன்ற பொருள் தீர்மான எண். 228 நாள் 30.09.2025

553
வருகை புரிந்த பெரும்பான்மை மாமன்ற உறுப்பினர்களின் அனுமதியோடு இப்பொருளின் அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| | 5 மாத காலத்திற்கு ( 01.01.2026 முதல் 31.05.2026 வரை) மதிப்பிட்டுத் தொகை ரூ.99.75 இலட்சத்திற்கு மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி நாள் . 22.0.7.2024 மாமன்ற தீர்மான எண் .458 நாள் 25.02.2026.<br>மேற்கூறியவாறு பணி மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்கி பணி நடைபெற்று வருகிறது. இந்நிலையில் மீண்டும் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தகாலம் 10.08.2026 அன்றுடன் முடிவடைய உள்ளதால் மேற்படி பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அலுவலகத்தின் மூலம் செயல்பாட்டு திறனின் அடிப்படையில் (performance Index) கணக்கீடும் பணி நடைபெற்றுக் கொண்டுள்ளதால் ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை முடிவடையாமல் இருப்பதால் பாதாள சாக்கடை பராமரிப்பு பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு அதே ஒப்பந்ததாரர், M/s InFraEN (India) Private Limited கொண்டு அதே விலை விகிதத்தில் பராமரிப்பு பணியினை மேற்கொள்ள மேலும் 1மாத காலத்திற்கு (11.08.2026 முதல் 10.09.2026) வரை ரூ.20.00 இலட்சம் (ரூபாய் இருபது இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:** 1. மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கு M/s.InFraEN (India) Pvt., Ltd., நிறுவனத்தாரின் அதே விலை விகிதத்தில் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதிக்கு.<br>**ந.க.எண்.9014/2023/இ4** | |
| | **பொருள் எண்.10**<br>கும்பகோணம் மாநகராட்சியில் எதிர்வரும் வடகிழக்கு பருவமழை துவங்க உள்ள நிலையில் மழையினால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை உடனுக்குடன் சரி செய்திடவும், மழைநீர் ஆங்காங்கே தேங்குவதை மோட்டார் மூலம் வெளியேற்றவும், மழையினால் விழும் மரங்களை அப்புறப்படுத்தவும், ஜே.சி.பி.மூலம் பணிகள் மேற்கொள்ளவும், மேலும் மழையினால் ஏற்படும் சேதங்களை உடனுக்குடன் சரிசெய்திட மண்டலம் 3-க்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:** 1. மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கு ஆகும் செலவினத்தினை குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்<br>3. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி மேல்நடவடிக்கை தொடர மாமன்றம் அங்கீகரிக்கலாம். .<br>**ந.க. எண்.7341 /2026/இ2** | 554<br>வருகை புரிந்த பெரும்பான்மை மாமன்ற உறுப்பினர்களின் அனுமதியோடு இப்பொருளின் அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது. |
| | **பொருள் எண்.11**<br>கும்பகோணம் மாநகராட்சியில் எதிர்வரும் வடகிழக்கு பருவமழை துவங்க உள்ள நிலையில் மழையினால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை உடனுக்குடன் சரி செய்திடவும், மழைநீர் ஆங்காங்கே தேங்குவதை மோட்டார் மூலம் வெளியேற்றவும், மழையினால் விழும் மரங்களை அப்புறப்படுத்தவும், ஜே.சி.பி.மூலம் பணிகள் மேற்கொள்ளவும், மேலும் மழையினால் ஏற்படும் சேதங்களை உடனுக்குடன் சரிசெய்திட மண்டலம் 1-க்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:** 1. மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கு ஆகும் செலவினத்தினை குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்<br>3. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி மேல்நடவடிக்கை தொடர மாமன்றம் அங்கீகரிக்கலாம். .<br>**ந.க. எண் 7347 /2026/இ2** | 555<br>வருகை புரிந்த பெரும்பான்மை மாமன்ற உறுப்பினர்களின் அனுமதியோடு இப்பொருளின் அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.. |

| | | |
|---|---|---|
| | **பொருள் எண்.12**<br>கும்பகோணம் மாநகராட்சியில் எதிர்வரும் வடகிழக்கு பருவமழை துவங்க உள்ள நிலையில் மழையினால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை உடனுக்குடன் சரி செய்திடவும், மழைநீர் ஆங்காங்கே தேங்குவதை மோட்டார் மூலம் வெளியேற்றவும், மழையினால் விழும் மரங்களை அப்புறப்படுத்தவும், ஜே.சி.பி.மூலம் பணிகள் மேற்கொள்ளவும், மேலும் மழையினால் ஏற்படும் சேதங்களை உடனுக்குடன் சரிசெய்திட மண்டலம் 2-க்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:** 1. மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கு ஆகும் செலவினத்தினை குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்<br>3. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி மேல்நடவடிக்கை தொடர மாமன்றம் அங்கீகரிக்கலாம். .<br>**ந.க. எண்.7340 /2026/இ2** | 556<br>வருகை புரிந்த பெரும்பான்மை மாமன்ற உறுப்பினர்களின் அனுமதியோடு இப்பொருளின் அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது. |
| | **பொருள் எண்.13**<br>கும்பகோணம் மாநகராட்சி தூய்மை பாரத இயக்கம் (நகர்ப்புறம்) 2.0 (Swachh Bharat Mission – Urban 2.0) மண்டலம்-2, வார்டு எண்-25, கண்ணகி தேன்கோட்டம் பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள சமுதாயக் கழிப்பிடத்திற்கு (Community Toilet) கூடுதல் சிவில் பணிகள் மேற்கொள்ளுதல் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 3.50 இலட்சம் (ரூபாய் மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) இச்செலவீனத்தினை மாநகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்<br>**ந.க.எண். 7339/2026/E2** | 557<br>வருகை புரிந்த பெரும்பான்மை மாமன்ற உறுப்பினர்களின் அனுமதியோடு இப்பொருளுக்கு அனுமதி வழங்கப்பட்டது |
| | **பொருள் எண்.14**<br>கும்பகோணம் மாநகராட்சி குடிதாங்கி தலைமை நீரேற்று நிலையம், வலையப்பேட்டை நீருந்து நிலையம் மற்றும் காவற்கூடம்(தாராசுரம்) ஆகியவற்றில் உள்ள மோட்டார்கள் மற்றும் பம்பு செட்டுகள், மின் மாற்றிகள், 19 எண்ணிக்கை குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை இயக்கி பராமரிக்கும் பணிக்கு ஐந்து மாதங்களுக்கு (செப்டம்பர் 2026 முதல் ஜனவரி 2027 வரை) தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.49.50 இலட்சம் (ரூபாய் நாற்பத்து ஒன்பது இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) இச்செலவீனத்தினை மாநகராட்சி குடிநீர் மற்றும் வடிகால்நிதியின் கீழ் கீழ் மேற்கொள்ளலாம். **ந.க.எண். 7193/2026/E2** | 558<br>வருகை புரிந்த பெரும்பான்மை மாமன்ற உறுப்பினர்களின் அனுமதியோடு இப்பொருளுக்கு அனுமதி வழங்கப்பட்டது |
| | **பொருள் எண்.15**<br>கும்பகோணம் மாநகராட்சி மண்டலம் 2 வார்டு எண் 21 யில் அமைந்திருக்கும் கும்பகோணம் மாநகராட்சி பிரதான கட்டிடத்திற்கு சிசி டிவி கேமரா (CCTV Camera) அமைக்கவும் மற்றும் இதர மின்சாரம் மற்றும் பிளம்பிங் (குழாய்வேலை) ஒரு வருட காலத்திற்கு பழுதுபார்க்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.7.00 இலட்சம் (ரூபாய் ஏழு இலட்சம் மட்டும்) மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) இச்செலவீனத்தினை மாநகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளலாம். **ந.க.எண். 7192 /2026/E2** | 559<br>வருகை புரிந்த பெரும்பான்மை மாமன்ற உறுப்பினர்களின் அனுமதியோடு இப்பொருளுக்கு அனுமதி வழங்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **பொருள் எண்.16**<br>கும்பகோணம் மாநகராட்சியில் எதிர்வரும் வடகிழக்கு பருவமழை துவங்க உள்ள நிலையில் மழையினால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை உடனுக்குடன் சரி செய்திடவும், மழைநீர் ஆங்காங்கே தேங்குவதை மோட்டார் மூலம் வெளியேற்றவும், மழையினால் விழும் மரங்களை அப்புறப்படுத்தவும், ஜே.சி.பி.மூலம் பணிகள் மேற்கொள்ளவும், மேலும் மழையினால் ஏற்படும் சேதங்களை உடனுக்குடன் சரிசெய்திட மண்டலம் 4-க்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:** 1. மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கு ஆகும் செலவினத்தினை குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்<br>3. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி மேல்நடவடிக்கை தொடர மாமன்றம் அங்கீகரிக்கலாம். .<br>**ந.க. எண்.7348 /2026/இ2** | 560<br>வருகை புரிந்த பெரும்பான்மை மாமன்ற உறுப்பினர்களின் அனுமதியோடு இப்பொருளின் அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது. |
| | **பொருள் எண்.17**<br>கும்பகோணம் மாநகராட்சி மண்டலம்-2 க்கு உட்பட்ட வார்டு எண் 20 பைராகிதோப்பில் அமைந்துள்ள பொது கழிவறைகளை பழுதுபார்த்தல் மற்றும் பராமரிக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2.00 இலட்சம் (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) இச்செலவீனத்தினை மாநகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்<br>**ந.க.எண். 7353 /2026/E2** | 561<br>வருகை புரிந்த பெரும்பான்மை மாமன்ற உறுப்பினர்களின் அனுமதியோடு இப்பொருளுக்கு அனுமதி வழங்கப்பட்டது |
| | **பொருள் எண்.18**<br>கும்பகோணம் மாநகராட்சி மண்டலம்-2 க்கு உட்பட்ட வார்டு எண் 20 சிவகுருநாதன் நகரில் அமைந்துள்ள பொது கழிவறைகளை பழுதுபார்த்தல் மற்றும் பராமரிக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2.00 இலட்சம் (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) இச்செலவீனத்தினை மாநகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்<br>**ந.க.எண். 7354 /2026/E2** | 562<br>வருகை புரிந்த பெரும்பான்மை மாமன்ற உறுப்பினர்களின் அனுமதியோடு இப்பொருளுக்கு அனுமதி வழங்கப்பட்டது. |
| | **பொருள் எண்.19**<br>கும்பகோணம் மாநகராட்சி மண்டலம்-2 வார்டு எண் 19, காசிராமன் நகர் பகுதியில் வாய்க்கால் அருகில் அமைக்கப்பட்டுள்ள பேவர் பிளாக் கற்கள் பல இடங்களில் சேதமடைந்து, பெயர்ந்து காணப்படுகின்றன. எனவே, பொதுமக்களின் நலன் மற்றும் பாதுகாப்பை கருத்தில் கொண்டு, சேதமடைந்துள்ள பேவர் பிளாக் கற்களை அகற்றி, தேவையான இடங்களில் அடித்தளத்தை சீரமைத்து, புதிய பேவர் பிளாக் கற்களை அமைத்து சீரமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 2.65 இலட்சம் (ரூபாய் இரண்டு இலட்சத்து அறுபத்தைந்தாயிரம் மட்டும்) மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) இச்செலவீனத்தினை மாநகராட்சி வருவாய் நிதியின் மேற்கொள்ளலாம்<br>**ந.க.எண்.7355 /2026/E2** | 563<br>வருகை புரிந்த பெரும்பான்மை மாமன்ற உறுப்பினர்களின் அனுமதியோடு இப்பொருளுக்கு அனுமதி கீழ் வழங்கப்பட்டது |
| | **பொருள் எண்.20**<br>கும்பகோணம் மாநகராட்சிக்கு நகர பசுமையாக்கல் (Urban Greenery) 2026-27, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அலுவலகத்தில் அரசு முதன்மை செயலாளர் அவர்களின் 09.07.2026ல் நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில் கும்பகோணம் மாநகராட்சிக்கு 64000 மரக்கன்றுகள் நட அறிவுறுத்தப்பட்டது. அதனடிப்படையில் இம்மாநகராட்சியில் மண்டலம்-1 ற்கு உட்பட்ட பகுதிகளில் 16000 மரக்கன்றுகள் நட இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள நீர் நிலைகளின் கரைகள், பூங்காக்கள் மாநகராட்சிக்கு சொந்தமான , காலி இடங்கள் மற்றும் சாலை ஓரங்களில் மரக்கன்றுகள் நடுவதற்காகJCB, Auger Boring மற்றும் இதர பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட ரூ.2,00,000 (ரூபாய் | 564<br>வருகை புரிந்த பெரும்பான்மை மாமன்ற உறுப்பினர்களின் அனுமதியோடு இப்பொருளின் அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி வழங்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | இரண்டு இலட்சம் மட்டும்) மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு**<br>1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்படி பணிக்கான செலவினத்தினை வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>3) மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி வணக்கத்துக்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ,ஒப்பந்தப்புள்ளி கோரி மேல்நடவடிக்கை தொடர மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண் 7351 /2026/E2** | |
| | **பொருள் எண்.21**<br>கும்பகோணம் மாநகராட்சிக்கு நகர பசுமையாக்கல் (Urban Greenery) 2026-27, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அலுவலகத்தில் அரசு முதன்மை செயலாளர் அவர்களின் 09.07.2026ல் நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில் கும்பகோணம் மாநகராட்சிக்கு 64000 மரக்கன்றுகள் நட அறிவுறுத்தப்பட்டது. அதனடிப்படையில் இம்மாநகராட்சியில் மண்டலம்-2 ற்குட்பட்ட பகுதிகளில் 16000 மரக்கன்றுகள் நட இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள நீர் நிலைகளின் கரைகள், பூங்காக்கள் மாநகராட்சிக்கு சொந்தமான காலி இடங்கள் மற்றும் சாலை ஓரங்களில் மரக்கன்றுகள் நடுவதற்காக JCB Auger Boring மற்றும் இதர பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட ரூ.2,00,000/- (ரூபாய் இரண்டு லட்சம் மட்டும்) மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு**<br>1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்படி பணிக்கான செலவினத்தினை வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>3) மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி வணக்கத்துக்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ,ஒப்பந்தப்புள்ளி கோரி மேல்நடவடிக்கை தொடர மாமன்றம் அனுமதிக்கலாம். **ந.க.எண்.7349 /2026/E2** | 565<br>வருகை புரிந்த பெரும்பான்மை மாமன்ற உறுப்பினர்களின் அனுமதியோடு இப்பொருளின் அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி வழங்கப்பட்டது |
| | **பொருள் எண்.22**<br>கும்பகோணம் மாநகராட்சிக்கு நகர பசுமையாக்கல் (Urban Greenery) 2026-27, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அலுவலகத்தில் அரசு முதன்மை செயலாளர் அவர்களின் 09.07.2026ல் நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில் கும்பகோணம் மாநகராட்சிக்கு 64000 மரக்கன்றுகள் நட அறிவுறுத்தப்பட்டது. அதனடிப்படையில் இம்மாநகராட்சியில் மண்டலம்-3 ற்கு உட்பட்ட பகுதிகளில் 16000 மரக்கன்றுகள் நட இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள நீர் நிலைகளின் கரைகள், பூங்காக்கள் மாநகராட்சிக்கு சொந்தமான , காலி இடங்கள் மற்றும் சாலை ஓரங்களில் மரக்கன்றுகள் நடுவதற்காக JCB, Auger Boring மற்றும் இதர பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட ரூ.2,00,000 (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்படி பணிக்கான செலவினத்தினை வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>3. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி வணக்கத்துக்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ,ஒப்பந்தப்புள்ளி கோரி மேல்நடவடிக்கை தொடர மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.7350 /2026/E2** | 566<br>வருகை புரிந்த பெரும்பான்மை மாமன்ற உறுப்பினர்களின் அனுமதியோடு இப்பொருளின் அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி வழங்கப்பட்டது |

**பொருள் எண்.23**

கும்பகோணம் மாநகராட்சிக்கு நகர பசுமையாக்கல் (Urban Greenery) 2026–27, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அலுவலகத்தில் அரசு முதன்மை செயலாளர் அவர்களின் 09.07.2026ல் நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில் கும்பகோணம் மாநகராட்சிக்கு 64000 மரக்கன்றுகள் நட அறிவுறுத்தப்பட்டது. அதனடிப்படையில் இம்மாநகராட்சியில் மண்டலம்–4 ற்கு உட்பட்ட பகுதிகளில் 16000 மரக்கன்றுகள் நட இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள நீர் நிலைகளின் கரைகள், பூங்காக்கள் மாநகராட்சிக்கு சொந்தமான , காலி இடங்கள் மற்றும் சாலை ஓரங்களில் மரக்கன்றுகள் நடுவதற்காக JCB, Auger Boring மற்றும் இதர பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட ரூ.2,00,000 (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தினை வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி வணக்கத்துக்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ,ஒப்பந்தப்புள்ளி கோரி மேல்நடவடிக்கை தொடர மாமன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.7352 /2026/E2**

567
வருகை புரிந்த பெரும்பான்மை மாமன்ற உறுப்பினர்களின் அனுமதியோடு இப்பொருளின் அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி வழங்கப்பட்டது

**பொருள் எண்.24**

இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 48 எண்ணிக்கை வார்டுகளாகவும், 4 மண்டலங்களாகவும் உள்ளது. இவற்றில் தாராசுரம் பகுதியில் அடங்கிய வார்டு எண்.31 முதல் 35 வரையிலான 5 வார்டுகளை தவிர்த்து மீதம் 43 வார்டுகளில் உள்ள 8 எண்ணிக்கை பாதாள சாக்கடை கழிவு நீரேற்று நிலையங்கள், மற்றும் 10 எண்ணிக்கை கழிவு நீர் உந்து நிலையங்கள் மூலமாக கழிவு நீர் சேகரிக்கப்பட்டு பாணாதுறை, செந்தில்நாதன் நகர் மற்றும் சோழன் நகர் கழிவு நீரேற்று நிலையங்கள் மூலமாக கரிக்குளத்தில் அமைந்துள்ள இம்மாநகராட்சிக்கு சொந்தமான கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு (STP) கொண்டு செல்லப்படுகிறது. இம்மாநகராட்சியில் கீழ்க்கண்ட இடங்களில் கழிவு நீரேற்று நிலையங்கள் மற்றும் கழிவு நீருந்து நிலையங்கள் அமைந்துள்ளன.

பாதாள சாக்கடை திட்டப் பணிகளுக்கு அமைக்கப்பட்டுள்ள கழிவு நீரேற்று நிலையங்கள் மற்றும் கழிவு நீர் உந்து நிலையங்களில் அமைக்கப்பட்டுள்ள மோட்டார்கள் மற்றும் மின் மோட்டார் பம்பு செட்டுகளையும் இயக்கவும் மற்றும் கும்பகோணம் மாநகரப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள 7676 எண்ணிக்கை பாதாள சாக்கடை இயந்திரக் குழிகளை இயக்கி பராமரிக்க கீழ்க்கண்டவாறு பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள்.

**கழிவு நீரேற்று நிலையங்கள் மற்றும் கழிவு நீர் உந்து நிலையங்கள்**

- மின் பணியாளர்கள் – 3 எண்ணிக்கை
- பராமரிப்பு உதவியாளர்கள் –25 எண்ணிக்கை

**கழிவு நீர் சேகரிப்பு அமைப்புகள் ( Collection System)**

- மேற்பார்வையாளர்கள் – 4 எண்ணிக்கை
- புதைவடிகால் சுத்தம் செய்பவர் (Sewer Cleaner) – 17 எண்ணிக்கை
- புதை வடிகால் பணியாளர் (Street sewer) – 7 எண்ணிக்கை
- ஓட்டுநர்– 9 எண்ணிக்கை
- வாகன உதவியாளர் – 9 எண்ணிக்கை
- மொத்தம் – 48 எண்ணிக்கை

| வ. எ ண் | கழிவு நீரேற்று நிலையங்கள் | தேவைப்படும் பணியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பாணாதுறை | 2 |
| 2 | செந்தில்நாதன் நகர் | 2 |
| 3 | சோழன் நகர் | 2 |
| 4 | வட குடியான் தெரு | 2 |
| 5 | நேரு காலனி | 2 |
| 6 | சோலையப்பன் தெரு | 2 |
| 7 | மாதுளம்பேட்டைத் தெரு | 2 |
| 8 | ஸ்ரீநிவாசா நகர் | 2 |
| | **மொத்தம்** | **16** |

568
வருகை புரிந்த பெரும்பான்மை மாமன்ற உறுப்பினர்களின் அனுமதியோடு இப்பொருளின் அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

| வ. எண் | கழிவு நீர் உந்து நிலையங்கள் | தேவைப்படும் பணியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பாரத் நகர் | 1 |
| 2 | ஜான் செல்வராஜ் நகர் | 1 |
| 3 | லால்பகதூர் சாஸ்திரி ரோடு (LBS Road) | 1 |
| 4 | துக்காம்பாளையத் தெரு | 1 |
| 5 | பத்மநாபன் நகர் | 1 |
| 6 | சுஜாதா நகர் | 1 |
| 7 | சோலையப்பன் தெரு கிழக்கு | 1 |
| 8 | சோலையப்பன் தெரு மேற்கு | 1 |
| 9 | சரோஜினி நகர் | 1 |
| 10 | ஆணைக்காரன் பாளையம் | 1 |
| | **மொத்தம்** | **10** |

மேற்கண்டவாறு பாதாள சாக்கடை திட்ட அமைப்பினை இயக்கி பராமரிக்கும் பணிகளுக்கு மொத்தம் 76 நபர்கள் தேவைப்படுகின்றனர். இதில், இம்மாநகராட்சி நிரந்தரப் பணியாளர்கள் இருவர் (Silt bucket Cleaner) பணி பார்த்து வருகிறார்கள். மீதம் 74 எண்ணிக்கை பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள். எனவே, பராமரித்தல் பணிகளை 75 நாட்களுக்கு (11.09.2026 முதல் 25.11.2026 வரை) 74 பணியாளர்களை வெளிக்கொணர்வு (Outsourcing) முறையில் அமர்த்திக்கொண்டு இயக்குதல் மற்றும் பராமரித்தல் (Operation and Maintenance) பணிகளை மேற்கொள்ளுவதற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் (TWAD) 2023–2024 தரப்படுத்தப்பட்ட விலைவிகிதத்தின் அடிப்படையில் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.49.50 இலட்சத்திற்கு (ரூபாய் நாற்பத்தொன்பது இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு ஆகும் செலவினத்தினை குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி மேல்நடவடிக்கை தொடர மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

**ந.க. எண் 5559 /2026/இ4**

**மேயர்**
**கும்பகோணம் மாமன்றம்**